# வெள்ளகோவில் நகராட்சி, திருப்பூர் மாவட்டம்

## 2018–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்

## தீர்மானம் நகல்

**தீர்மானம் எண் : 256 / 2018, நாள் : 31.12.2018**

வெள்ளகோவில் நகராட்சியில் கட்டிட வரைபட வரைவாளர் அனுமதி வேண்டி விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது. மேற்படி மனுதாரரை நகராட்சியின் கட்டிட வரைபட வரைவாளராக அனுமதி வழங்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி |
|---|---|
| 1 | திரு. என். கோபு, (கல்வித்தகுதி – DCE)<br>த/பெ. என். நாகராஜன், 600, மு.பழனிச்சாமி நகர், வெள்ளகோவில் – 638111 |

அலுவலககுறிப்பு

நகரமைப்பு விதிகளின்படி உரிய கட்டணங்களை வசூல் செய்து அனுமதி பெற்ற கட்டி வரைபட வரைவாளராக அனுமதி வழங்கலாம்.

(கோப்பு எண். 1833 / 2018 / எப்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 257 / 2018, நாள் : 31.12.2018**

வெள்ளகோவில் நகராட்சி மன்றத் தீர்மானம் எண். 150 / 2018, நாள். 10.07.2018–ல் இந்நகராட்சியின் சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம் மற்றும் வரியில்லா இனங்கள், உரிமக்கட்டணம் ஆகியவற்றை 100 சதவீதம் வசூல் செய்ய அறிவிப்பு நோட்டீஸ் ஆட்டோ விளம்பரம், பிளக்ஸ் போர்டுகள் அமைக்கவும் நிர்வாக அனுமதி வழங்கியதையுள்ளதை தொடர்ந்து மேற்கண்ட வரிஇனங்கள் 31.03.2019ஆம் தேதிக்குள் 100 சதவீதம் வசூல் செய்யும் பொருட்டு பொதுமக்கள் அறியும் வண்ணம் நகர் முழுவதும் வார்டு பகுதிகளில் ஆட்டோ மூலம் மைக்செட் அமைத்து டீசல் செலவு உட்பட விளம்பரம் செய்ய செலவினத்திற்கு விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில், 28.12.2018ஆம் தேதியில் கீழ்காணும் விபரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வரப்பெற்ற விலைப்புள்ளிதாரர் விபரம் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | திரு. ஜி. உதயகுமார்,<br>ஆட்டோ ஓட்டுநர், புதிய பேருந்து நிலையம்,<br>வெள்ளகோவில் | ரூ. 2500 /– (ஒலிபெருக்கி ஆட்டோ வாடகை, டீசல், கூலி உட்பட 1 நாள் வாடகை) |
| 2 | திரு. எஸ். ரமேஷ்,<br>ஆட்டோ ஓட்டுநர், புதிய பேருந்து நிலையம்,<br>வெள்ளகோவில் | ரூ. 2900 /– (ஒலிபெருக்கி ஆட்டோ வாடகை, டீசல், கூலி உட்பட 1 நாள் வாடகை) |
| 3 | திரு. கே. கண்ணன்,<br>ஆட்டோ ஓட்டுநர், புதிய பேருந்து நிலையம்,<br>வெள்ளகோவில் | ரூ. 2700 /– (ஒலிபெருக்கி ஆட்டோ வாடகை, டீசல், கூலி உட்பட 1 நாள் வாடகை) |

அலுவலககுறிப்பு

1) வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திரு. ஜி. உதயகுமார், ஆட்டோ ஓட்டுநர், வெள்ளகோவில் நாள் ஒன்றுக்கு ரூ. 2500 /– விலைப்புள்ளி தெரிவித்துள்ளபதை மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2) 2018–2019–ஆம் வரிவசூல் பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்கவும், செலவினத்திற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(கோப்பு எண். 1302 / 2018 / அ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 258 / 2018, நாள் : 31.12.2018**

நகர்மன்றத் தீர்மானம் எண். 245 / 2018, நாள். 30.11.2018–ல் அனுமதியின்பேரில் பொது சுகாதார வாகனம் எண். TN 33 AZ 7537-ன் தகுதிச்சான்று புதுப்பிக்க வாகனத்தை பழுது நீக்கம்

செய்வதற்கு 11.12.2018–ந் தேதிய ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றதற்கான ஒப்புநோக்குப் பட்டியல் உடன் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | காந்தி மோட்டார்ஸ், ஈரோடு | ரூ. 88,200 /– |
| 2 | மேட்டுப்பாளையம் ஆட்டோ சர்வீஸ் சென்டர் | ரூ. 89,800 /– |

அலுவலககுறிப்பு

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர் காந்தி மோட்டார்ஸ், ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பொது சுகாதார வாகன உபயோகத்தின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதியை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 259 / 2018, நாள் : 31.12.2018**

நகர்மன்றத் தீர்மானம் எண். , நாள். அனுமதி வழங்கியுள்ளதின்பேரில் பொது சுகாதாரத்திற்கு பயன்படுத்தும் டம்பர் பின் பெட்டிகள் பழுதினை சரிசெய்து புதுப்பித்துத் தர 11.12.2018–ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | லட்சுமி ஏஜென்ஸிஸ், கோவை | ரூ. 36,900 /– |
| 2 | வி.எஸ்.எம். இன்ஞ்னியரிங், கோவை | ரூ. 38,080 /– |

அலுவலககுறிப்பு

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர் லட்சுமி ஏஜென்ஸிஸ், கோவை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பொது சுகாதார வாகன உபயோகத்தின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதியை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 260 / 2018, நாள் : 31.12.2018**

வெள்ளகோவில் நகராட்சி தனியார் பள்ளிகளுக்கு சொத்துவரி விதிப்பு செய்தததற்கு எதிராக புனித அமல அன்னை மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது. இதில் மூன்றாவது எதிர்மனுதாரராக வெள்ளகோவில் நகராட்சி ஆணையர் சேர்க்கப்பட்டுள்ளார். இதற்கு எதிர்வாதுரை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு திரு. பி.எஸ். சிவசண்முகசுந்தரம் அரசு சிறப்பு வழக்கறிஞர் அவர்களை நியமனம் செய்து உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

அதனைத் தொடர்ந்து மேற்படி வழக்கறிஞருக்கு வழக்கறிஞர் கட்டணமாக ரூ. 15,000 /–ம் அனுப்பி வைக்கக் கோரியுள்ளார். எனவே வழக்கறிஞர் கட்டணமாக ரூ. 15,000 /–ம் மட்டும் திரு. பி.எஸ். சிவசண்முகசுந்தரம் அரசு சிறப்பு வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1501 / 2018 / அ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 261 / 2018, நாள் : 31.12.2018**

2018–19–ம் ஆண்டு நகராட்சி பொது நிதியின்கீழ் ரூ. 90.50 இலட்சம் மதிப்பீட்டில் 3 சாலைப்பணிகள் மேற்கொள்ள 04.01.2019–ல் ஒப்பந்தப்புள்ளி கோர விளம்பரம் மாவட்ட அளவிலான நாளிதழ்களில் விளம்பரம் செய்தமைக்கான தொகை ரூ. 25,402 /–ஐ கேட்டு Dina Cheithi, Chennai அவர்களிடமிருந்து பட்டியல் எண். CHN 18-19 / 1643, நாள். 18.12.2018-ல் பட்டியல் கிடைக்கப்பெற்றுள்ளது. மேற்படி தொகை ரூ. 25,402 /–ஐ மேற்படி நிறுவனத்திற்கு காசோலை மூலம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 2097 / 2018 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 262 / 2018, நாள் : 31.12.2018**

வெள்ளகோவில் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் வீடு வீடாகச் சென்று டெங்கு தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வதற்கு 56 தற்காலிக DBC பணியாளர்களைக் கொண்டு டெங்கு காய்ச்சல் ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றத் தீர்மானம் எண். 182 / 2018, நாள். 28.09.2018–ல் அனுமதிக்கப்பட்டதில் அனுமதிக்காலம் 31.12.2018–ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 1588 / ஜே1 / 2015, நாள். 16.10.2015 மற்றும் துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள், திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 509 / அ2 / 2010, நாள். 07.10.2015–ல் நகராட்சிப் பகுதிகளில் வீடு வீடாகச் சென்று டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள தற்காலிகப் பணியாளர்களை 300 வீடுகளுக்கு ஒருகளப் பணியாளரை நியமனம் செய்யவும், நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் காய்ச்சல் கண்ட நபர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தால் அல்லது டெங்கு காய்ச்சல் எனத்தெரிந்தால் உடனே அப்பகுதியில் அதிகமான DBC பணியாளர்களை நியமித்து 300 வீடுகளுக்கு இரண்டு களப்பணியாளர்களை நியமனம் செய்து பாதிக்கப்பட்ட பகுதிகளில் முன் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 16828 வீடுகள் உள்ளதால், 300 வீடுகளுக்கு ஒரு DBC பணியாளர் என்ற அடிப்படையில் 16828 வீடுகளுக்கு 56 தற்காலிக DBC பணியாளர்களைப் பணியில் ஈடுபடுத்தலாம்.

எனவே 01.01.2019 முதல் 31.03.2019 வரையிலான காலத்திற்கு 56 தற்காலிகக் களப்பணியாளர்களை பணியில் ஈடுபடுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கான உத்தேசச் செலவினம் ரூ. 12,00,000 /–ம் ஆகும். மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 862 / 2015 / ஹெச்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 263 / 2018, நாள் : 31.12.2018**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருவிளக்குகள் தற்பொழுது Schnell energy equipment (p) ltd மூலம் இயக்குதல் மற்றும் பேணுதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் நகராட்சி மூலம் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் கீழ்காணும் LED மற்றும் உயர்கோபுர விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| 20 வாட்ஸ் LED விளக்குகள் | – 100 எண்ணிக்கை |
| 16 மீட்டர் LED உயர்கோபுர விளக்கு | – 2 எண்ணிக்கை |
| 9 மீட்டர் LED உயர்கோபுர விளக்கு | – 1 எண்ணிக்கை |

மேற்படி விளக்குகளை ஏற்கனவே பராமரிப்பு பணியில் ஈடுபட்டுள்ள Schnell energy equipment (p) ltd நிறுவனம் மூலம் மேற்கொள்ள கோரியதில் 22.10.2018–ந் தேதிய கடிதத்தில் தங்களால் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தங்களது ஒப்பந்தத்தில் விலையேதும் இல்லை எனவும், இதனால் மாற்று ஏற்பாடுகள் செய்து கொள்ளவும் தெரிவித்துள்ளனர். எனவே மேற்படி விளக்குகள் மற்றும் இனிவரும் காலங்களில் அமைக்கப்படும் விளக்குகளையும் நகராட்சியின் மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கான உத்தேச செலவினம் ரூ. 5,00,000 /–ம் ஆகும்.

அலுவலககுறிப்பு

தெருவிளக்கு அவசர அவசியம் கருதி மேற்காணும் LED விளக்குகளை ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 587 / 2014 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 264 / 2018, நாள் : 31.12.2018</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட எல்.கே.சி.நகர் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் MCC ரூ. 30.00 இலட்சத்தில் அமைக்கப்பட்டு வருகிறது. இதில் மதிப்பீட்டில் இல்லாத கூடுதல் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

1) தளம் அமைத்தல்
2) கூடுதல் செட் அமைத்தல்
3) கிரில் வைத்தல்
4) பிளாட்பாரம், ரேம்ப் அமைத்தல்
5) கழிப்பிடத்தில் டைல்ஸ் மற்றும் கதவுகள் அமைத்தல்
6) படம் வரைதல் (swm விளம்பரம்)
7) கழிவுநீர் குழாய் அமைத்தல்
8) ஒயரிங் செய்தல்
9) கழிவுநீர் தொட்டி அமைத்தல்

மேற்படி பணிகளுக்கான உத்தேச மதிப்பீடு ரூ. 10,00,000 /–ம் ஆகும். மேற்படி பணி மேற்கொள்ளவும், இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 265 / 2018, நாள் : 31.12.2018</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட சந்தைபேட்டை பகுதியில் அமைக்கப்பட்டு வரும் MCC-ல் கூடுதல் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

1) தரைதளம் அமைத்தல்
2) கூடுதல் செட் அமைத்தல்
3) கிரில் வைத்தல்
4) பிளாட்பாரம், ரேம்ப் அமைத்தல்
5) கழிப்பிடம் டைல்ஸ் மற்றும் கதவுகள் அமைத்தல்
6) வரைபடம் அமைத்தல்
7) கழிவுநீர் குழாய், தொட்டி அமைத்தல்
8) ஒயரிங் செய்தல்

மேற்படி பணிகளுக்கான உத்தேச மதிப்பீடு ரூ. 10,00,000 /–ம் ஆகும். மேற்படி பணி மேற்கொள்ளவும், இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 266 / 2018, நாள் : 31.12.2018</u>**

இந்நகராட்சி பகுதிகளுக்கு அமராவதி குடிநீர் திட்டத்திலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் தலைமை நீரேற்று நிலையம் புதுப்பையில் உள்ளது. இங்கு 45 கு.வே. டர்பைன் மின்மோட்டார் இரண்டும், 75 கு.வே. டர்பைன் மின்மோட்டார் ஒன்றும் பொருத்தப்பட்டுள்ளது. இங்கிருந்து 250 mm HDPE pipe மற்றும் 200 MM AC pipe ஆகிய இரண்டு மெயின் குழாய்கள் வெள்ளகோவில் நீருந்து நிலையம் வரை அமைக்கப்பட்டுள்ளது. 200 mm AC குழாய் பழுதடைந்துள்ளது. இதனை சரிசெய்ய நெடுஞ்சாலைத்துறை அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதனால் தற்சமயம் HDPE pipe மற்றும் 40 கு.வே டர்பைன் மின்மோட்டார் மட்டுமே இயங்கி வருகிறது. 200 mm AC குழாய்சரிசெய்யும் பட்சத்தில் 75 கு.வே. டர்பைன் மின்மோட்டார் இயக்கப்பட்டு இரண்டு pumping line மூலமாக குடிநீர் விநியோகம் செய்ய இயலும். இதன் மூலம் தினசரி 2.50 எம்.எல்.டி. வரை குடிநீர் பெற முடியும். இதற்கு வெள்ளகோவில் நீருந்து நிலையத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட தொட்டி ஒன்று மட்டுமே உள்ளது. 2.50 எம்.எல்.டி. குடிநீர் விநியோகம் செய்யும் பட்சத்தில் நீருந்து நிலையத்தில் ஏற்கனவே உள்ள sump போதுமானதல்ல என்பதால் கூடுதலாக 1,00,000 /–ம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு தரைமட்ட தொட்டி அமைக்க வேண்டியது அவசியமாக உள்ளது. இதற்கான உத்தேச மதிப்பீடு

ரூ. 10,00,000 /—ம் ஆகும். மேற்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கும், பணிமேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 267 / 2018, நாள் : 31.12.2018**

இந்நகராட்சிக்குட்பட்ட கரட்டுப்பாளையம் முதல் கணபதிபாளையம் ரோடு வரை உள்ள மண்சாலையை தார்சாலையாக அமைக்கும் பணி TURIP 2019 திட்டத்தில் நடைபெற்று வருகிறது. இந்த சாலையில் அமைக்கப்பட்டுள்ள சிறுமின்விசைப் பம்பு திட்டத்தின் விநியோகக் குழாய்கள் மற்றும் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் 5'' விநியோகக் குழாய்கள் சில இடங்களில் தார்சாலை அமைக்கும் பகுதிகளுக்குள் செல்வதால் இதனை மாற்றியமைக்க வேண்டியுள்ளது. குடிநீர் அவசியம் கருதி இப்பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமானதாகும். இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 5,40,000 /—ம் ஆகும். மேற்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கும், பணிமேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 268 / 2018, நாள் : 31.12.2018**

இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் இடங்களில் அமைக்கப்பட்டுள்ள சிறுமின்விசைப்பம்பு திட்டங்களின் PVC தண்ணீர் தொட்டிகள் பழுதடைந்து தண்ணீர் கசிவு ஏற்படுகிறது. இதனால் பொதுமக்கள் தண்ணீர் பிடிக்க ஏதுவாக மேற்படி தண்ணீர் தொட்டிகளில் தண்ணீர் தேக்கி வைக்க இயலவில்லை. இதனால் பொதுமக்கள் தண்ணீர் பிடிக்க இயலாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள்.

1) இந்திராநகர் வடக்கு
2) இந்திராநகர் தெற்கு
3) கல்லாங்காட்டுவலசு
4) மு.பழனிச்சாமி நகர்
5) வெட்டுக்காடு
6) அமராவதி நகர்
7) சிவநாதபுரம்

எனவே இந்த பழுதடைந்த தண்ணீர் தொட்டிகளை அகற்றிவிட்டு புதியதாக தண்ணீர் தொட்டிகள் பொருத்த வேண்டியுள்ளது. குடிநீர் அவசர அவசியம் கருதி இந்தப்பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது. இந்தப்பணிகளுக்கான உத்தேச மதிப்பீடு ரூ. 4,70,000 /—ம் ஆகும். மேற்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கும், பணிமேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 269 / 2018, நாள் : 31.12.2018**

இந்நகராட்சிக்குட்பட்ட கணபதிபாளையம் ரோடு முதல் குறுக்கபாளையம் பிரிவு வரை செல்லும் சாலையில் அமைந்துள்ள குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்புகள் கோரி விண்ணப்பித்துள்ளனர். இப்பகுதியில் விநியோகக் குழாய்கள் அமைக்கப்படவில்லை. எனவே இப்பகுதியில் குடிநீர் விநியோகக் குழாய் அமைக்க வேண்டியது அவசியமாக உள்ளது. இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 3,00,000 /—ம் ஆகும். மேற்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கும், பணிமேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 270 / 2018, நாள் : 31.12.2018</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட காடையூரான்வலசு பகுதிக்கு சரிவர குடிநீர் விநியோகம் கிடைப்பதில்லை. இதனால் இப்பகுதி பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். இந்தக் குறைபாட்டை சரிசெய்ய சீரங்கராயகவுண்டன்வலசு ரோடு இணைப்பு சாலை முதல் காடையூரான்வலசு வரை குழாய் விஸ்தரிப்பு செய்து குடிநீர் விநியோகம் வழங்கலாம். மேலும் காடையூரான்வலசு ஆதிதிராவிடர் பகுதியில் 200 mm PVC குழாயை விஸ்தரிப்பு செய்யலாம். குடிநீர் அவசர அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் இப்பணி மேற்கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது. இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 7,30,000 /–ம் ஆகும். மேற்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கும், பணிமேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 271 / 2018, நாள் : 31.12.2018</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட கணபதிபாளையம் ரோடு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நவீன எரிவாயு தகனமேடையை சுற்றியும் சுற்றுச்சுவர் அமைக்க வேண்டியுள்ளது. ஏற்கனவே சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டுள்ள இடம் தவிர கூடுதலாக சுற்றுச்சுவர் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ. 10,00,000 /–ம் ஆகும். மேற்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கும், பணிமேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 272 / 2018, நாள் : 31.12.2018</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட 13–வது வார்டு அரியாண்டிவலசுகிழக்கு பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்யப் பயன்படும் விநியோகக் குழாய்கள் பழுதடைந்துள்ளது. இதனால் இப்பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் மேற்கொள்ள இயலவில்லை. மேலும் இப்பகுதியிலுள்ள குடியிருப்புதாரர் குடிநீர் இணைப்புக் கோரி விண்ணப்பித்துள்ளார். எனவே இப்பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியுள்ளதால், இப்பகுதிகளுக்கு குடிநீர் விநியோகக் குழாய் அமைக்க வேண்டியது அவசியமாக உள்ளது. இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 7,60,000 /–ம் ஆகும். மேற்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கும், பணிமேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 273 / 2018, நாள் : 31.12.2018</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட திருச்சி கோவை ரோடு முதல் அருண்வீடு வழியாக உப்புப்பாளையம் ரோடு செல்லும் சாலையில் சுப்பிரமணி வீடு முதல் சேகர் தோட்டம் வரை தார்சாலை அமைக்கப்படாமல் உள்ளது. இந்த இடைவெளி தவிர இருபக்கமும் சாலை அமைக்கப்பட்டுள்ளது. இதனால் போக்குவரத்திற்கு பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே இந்த விடுபட்டுள்ள மண்சாலையை தார்சாலையாக அமைக்க வேண்டியுள்ளது. இந்த பணிகளுக்கான உத்தேச மதிப்பீடு ரூ. 4,00,000 /–ம் ஆகும். மேற்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கும், பணிமேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 274 / 2018, நாள் : 31.12.2018</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் தானியங்கி குடிநீர் மையங்கள் அமைக்க தமிழக அரசு 2018–19–ம் ஆண்டு நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்

துறை மானிய கோரிக்கை எண். 34, அறிக்கை எண். 14ல் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பேரில் வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட 19 இடங்களில் தனியார் தொழில் நிறுவனம் / தொழில் முனைவோர்கள் மூலம் அமைக்க Expression of Interest விளம்பரம் மாநில ஒப்பந்தப்புள்ளி மலம் மற்றும் ஒரு தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களின் விளம்பரம் செய்தமைக்கு ரவி பப்ளிசிட்டி சர்வீஸ் நிறுவனத்திடமிருந்து ரூ. 57,383 /—க்கு பட்டியல் எண். RPS / 18-19 / 942, நாள். 04.12.2018-ல் கிடைக்கப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் — அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 275 / 2018, நாள் : 31.12.2018**

வெள்ளகோவில் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் முதிர் கொசு ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ள பயன்படுத்தி வந்த புகை அடிக்கும் இயந்திரத்தில் (Fogging Machine) உள்ள பைப் ஓட்டையாகி விட்டதால் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. பொது சுகாதார பயன்பாட்டின் அவசர அவசியம் கருதி மேற்படி பைப்பினை மாற்றி இயக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 16,000 /— ஆகும். மேற்படி செலவினத் தொகை ரூ. 16,000 /—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. துப்புரவு ஆய்வாளர் தமது சொந்த பொறுப்பில் பணியினை மேற்கொண்டு பட்டியலை சமர்ப்பித்து பட்டியல் தொகையினை பெற்றுக் கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொது நிதியில் இருந்து மேற்படி செலவினம் மேற்கொள்ளலாம்
3) உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று துப்புரவு ஆய்வாளர் பணிமேற்கொள்ளலாம்.

(கோப்பு எண். 1345 / 2018 / எச்1)

**தீர்மானம் — அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 276 / 2018, நாள் : 31.12.2018**

திருப்பூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக திட்ட அமைப்பாளர் அவர்களின் தொலைபேசி செய்தியில் தெரிவித்துள்ளபடி நகராட்சிகளில் பணிபுரியும் பணியாளர்களின் தினசரி வருகைப் பதிவை Bio Metric Devices மூலம் Web based முறையில் Urban Tree Information System Software-ல் கண்காணிக்கும் முறை 01.06.2019—ல் அமல்படுத்த உள்ளதாகவும், மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதத்திற்குள் நகராட்சியில் Bio Metric Devices பொருத்தப்பட்டு test trail செய்து பார்க்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் வருகைப் பதிவை Bio Metric Devices-ல் கண்காணிக்க மூன்று Bio Metric Devices, ஒரு கணினி மற்றும் நெட்வொர்க் வசதி செய்து பொருத்துவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 1,20,000 /—க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். / 2019 / இ1)

**தீர்மானம் — அனுமதிக்கப்பட்டது**

**(ஒப்பம்) திரு. அ. சங்கர்**
**தனி அலுவலர் /**
**ஆணையாளர்**
**வெள்ளகோவில் நகராட்சி**
**திருப்பூர் மாவட்டம்**